செ.வெ.எண்:.62

நாள்:.20.01.2011

**20.01.2011**

**பொது (தேர்தல்கள்–1)த் துறை,**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டமேலவையின் பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியல்கள் 22.11.2010 அன்று வெளியிடப்பட்டன. பட்டதாரிகள் தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியல்களில் 3,13,648 வாக்காளர்களும், ஆசிரியர்கள் தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியல்களில் 70,923 வாக்காளர்களும் இடம் பெற்றிருந்தனர்.

2. பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தல்/இடம் மாற்றுதல் ஆகியவற்றுக்கான கால அவகாசம் 22.11.2010 முதல் 16.12.2010 வரை இருந்தது. இக்கால கட்டத்தில், பட்டதாரிகள் தொகுதிகளில் பெயர் சேர்த்தலுக்காக 4,31,059 விண்ணப்பங்களும் ஆசிரியர்கள் தொகுதிகளில் பெயர் சேர்த்தலுக்காக 68,060 விண்ணப்பங்களும் பெறப்பட்டு உரிய ஆய்வுக்குப்பின் வாக்காளர் பதிவு அலுவலர்களால் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. தமிழ்நாடு சட்டமேலவையின் பட்டதாரிகள் ஆசிரியர்கள் மற்றும் தொகுதிகளின் இறுதி வாக்காளர் பட்டியல்கள் இன்று (20.01.2011) வெளியிடப்பட்டன. பட்டதாரிகள் தொகுதிகளின் இறுதி வாக்காளர் பட்டியலில் 7,38,509 வாக்காளர்களும், ஆசிரியர்கள் தொகுதிகளின் இறுதி வாக்காளர் பட்டியலில் 1,37,929 வாக்காளர்களும் உள்ளனர்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,